வண்ணப் புகைப்படங்களுக்கும் வீடியோ படப்பிடிப்புக்கும் என்றும் நாடுங்கள்
அஜந்தா போட்டோ அன்ட் வீடியோ
63, சங்கிலியன் வீதி, நல்லூர்.



Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 ஆனி 20 திங்கட்கிழமை (04 07 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 218

வண்ணப் புகைப்படங்களுக்கும் வீடியோ படப்பிடிப்புக்கும் என்றும் நாடுங்கள்
அஜந்தா போட்டோ அன்ட் வீடியோ
63, சங்கிலியன் வீதி, நல்லூர்.

# வீரகாவியம் படைத்த 27 கரும்புலிகளின் நினைவு தினம் நாளைஎங்கும் அனுஷ்டிப்பு!

யாழ்ப்பாணம், ஜூலை 4

தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் உலகம் வியக்கும் சாதனைகளைப் படைத்து வீரகாவியமாகி விட்ட 27 கரும்புலிகளின் நினைவு நாள் நாளை தமிழீழம் எங்கும் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

கரும்புலிகளை நினைவு கூர்ந்து அவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் குடாநாட்டின் சகல பகுதிகளிலும் கடந்த இரண்டு வாரங்களாக மேற்கொள்ளப்பட்டுவந்த முன்னேற்பாட்டு நடவடிக்கைகள் நேற்று களைகட்டின. நாளை கரும்புலிகள் தினத்தை உணர்வுபூர்வமாக அனுஷ்டிப்பதற்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தியடைந்துள்ளன.

குடாநாட்டின் பிரதான சந்திகளிலும், பொது இடங்களிலும் மற்றும் விடுதலைப் புலிகளின் முகாம்களிலும் அமைக்கப்பட்டுள்ள அலங்காரப் பந்தல்களில் கரும்புலிகளின் உருவப்படங்கள் வைக்கப்பட்டுள்ளன.

பல இடங்களில் அலங்கார வளைவுகளும், பதாகைகளும் அமைக்கப்பட்டுள்ளன.

கரும்புலிகளின் உருவப்படங்களைக் கொண்ட வண்ணக் கொடிகள் எங்கும் பறக்க விடப்பட்டுள்ளன.

நாளை காலை 8-30 மணிக்கு தமிழீழ தேசியக்கொடி ஏற்றப்படுவதுடன் கரும்புலிகள்

( ஆம் பக்கம் பார்க்க )

## கரும்புலிகள் படங்களுடன் பல இடங்களில் ஊர்திபவனி

யாழ்ப்பாணம், ஜூலை 4

கரும்புலிகளின் உருவப் படங்களைத் தாங்கிய ஊர்திப் பவனிகள் இன்றும் நாளையும் நடைபெறவுள்ளன.

இன்று காலை 8 மணிக்கு யாழ் பஸ் நிலையப் பகுதியில் இருந்து புறப்படவுள்ள ஊர்தி கண்டி வீதி வழியாக கைதடி, சாவகச்சேரி, கொடிகாமம், புத்தூர் ஊடாக வடமராட்சி கலிகைச் சந்தியை சென்றடையும்.

அங்கு தரித்து நின்ற பின் அந்த ஊர்தி நாளை காலை அங்கிருந்து புறப்பட்டு மந்திகை, பருத்தித்துறை கடற்கரை வீதி, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, நெல்லியடி வழியாகச் சென்று வடமராட்சிக் கோட்டத்தில் பொதுக் கூட்டம் நடைபெறும் இடத்தைச் சென்றடையும்.

ஊர்திப் பவனி செல்லும் வீதிகளில் மக்கள் தங்கள் இல்லங்களின் முன்னால் மங்கள விளக்கு ஏற்றி மலரஞ்சலி செய்வர்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

# —அவசரகாலச் சட்டத்தை— காலாவதியாக விட முடிவு?

## தேர்தலை ஒட்டி அரசு ஏற்பாடு

கொழும்பு ஜூலை 4

தொடர்ந்து நடைமுறையில் உள்ள அவசரகாலச் சட்டத்தை பொதுத் தேர்தலை ஒட்டி இம்மாதம் பதினைந்தாம் திகதியோடு காலாவதியாக விடுவதற்கு அரசாங்கம் முடிவு செய்திருப்பதாகக் கூறப்படுகிறது.

அரசாங்கம் விரும்பினால் அவசரகாலச் சட்டத்தை நீடிப்பதற்கு அரசமைப்புச் சட்டத்தில் வசதி செய்யப்பட்டிருந்தாலும்—

அந்த வசதியைப் பயன்படுத்தாமல், அவசரகாலச் சட்டத்தை காலாவதியாக விடுவதற்கே அரசு விரும்புவதாகச் சொல்லப்படுகிறது.

பொதுத் தேர்தலை ஒட்டியே அரசு இத்தகைய முடிவுக்கு வந்திருப்பதாக அறியப்படுகிறது.

1983 ஆம் ஆண்டு ஜூலை தொடக்கம், அவசரகாலச் சட்டம் தொடர்ந்து நடைமுறையில் இருந்து வருகிறது. 1989 இல் பொதுத் தேர்தலுக்காக நீக்கப்பட்ட சட்டம் ஆறு

(4 ஆம் பக்கம் பார்க்க

## மூடப்பட்டிருக்கும்

கரும்புலிகள் தினத்தை முன்னிட்டு அனுமதி வழங்கும் செயலகங்கள் குடும்ப அட்டைப் பகுதிச் செயலகங்கள், மோட்டார் ஊர்தி பதிவுச் செயலகம், விசாரணைப் பகுதிச் செயலகம் யாழ் - வன்னி தொடர்பு சேவைச் செயலகம் என்பன நாளை திறக்கப்படமாட்டா என்பதை பொதுமக்களின் கவனத்திற்கு போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவினர் அறியத்தந்துள்ளனர்.

## பொருளாதாரத் தடையும் சட்ட வலுவை இழக்கும் நிலை!

அவசரகாலச் சட்டம் காலாவதியானால் தற்போதைய பாதுகாப்பு நெருக்கடிகளில் மேலும்பல சிக்கல்களை அரசு எதிர்நோக்க வேண்டி வரும் என்று விடயமறிந்த வட்டாரங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

பொதுமக்கள் பாதுகாப்பு சட்டத்தின் (அவசரகாலச் சட்டத்தின்) கீழேயே—

வடபகுதிக்கு குறிப்பிட்ட சில பொருள்களை எடுத்து வருவதை தடை செய்வதற்கான உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

அவசரகாலச் சட்டம் காலாவதியானால் வடபகுதி மீதான பொருளாதாரத் தடை உத்தரவும் செல்லுபடியற்றதான நிலை ஏற்படும்.

அத்துடன் அவசரகாலச் சட்ட விதிகளின் கீழேயே —

பொலிஸார் தவிர்ந்த பாதுகாப்பு படையினருக்கு ஆட்களைச் சோதனையிடவும், கைது செய்யவும், காவலில் வைக்கவும் அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது.

அவசரகாலச் சட்ட விதி காலாவதியாகும்போது இந்த அதிகாரங்களை பாதுகாப்புப் படையினர் இழந்து விடுவர்.

எனவே இச்சட்டத்தின் கீழ் இப்போது தடுப்புக் காவலில் இருப்போரை விடுவிக்கவேண்டிய நிலையும் அரசுக்கு ஏற்படும்.

எனினும் அவ்வாறு விடுவிக்கப்படுவோரை உடனடியாக பயங்கரவாத தடுப்பு (நிரந்தர ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் மீண்டும் கைது செய்து தடுத்துவைக்க முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

(உ-ஐ 3)

## தமிழீழ சட்டக்கல்லூரி நேற்று திறந்துவைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 4

தமிழீழத்தின் முதலாவது சட்டக்கல்லூரி நேற்று திறந்து வைக்கப்பட்டது.

அந்த நிகழ்ச்சியில் தமிழீழ தேசியக் கொடியை தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் ஏற்றி வைத்தார். தொடர்ந்து நிதித்துறையைச் சேர்ந்த பாண்டியன் மங்கள விளக்கை ஏற்றினார்.

சட்டக்கல்லூரியின் பெயர்ப் பலகையை தமிழீழ கல்விக் கழகத்தைச் சேர்ந்த திரு. வெ. இளங்குமரன் திரை நீக்கம் செய்து வைத்தார்.

தமிழீழ அரசியல்துறை பொறுப்பாளர் திரு. தமிழ்ச்செல்வன் சம்பிரதாயபூர்வமாக நாடாவை வெட்டி சட்டக்கல்லூரியைத் திறந்து வைத்தார்.

பின்னர் அங்கு தமிழீழ அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் திரு. கரிகாலன் தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் டாக்டர் அன்ரன் பாலசிங்கம், அரசியல் துறைத் துணைப் பொறுப்பாளர் திரு. கரிகாலன், நீதி நிர்வாகப் பொறுப்பாளர் திரு பரா ஆகியோர் அந்தக் கூட்டத்தில் உரையாற்றினர்.

விடுதலைப் புலிகளின் முக்கிய பிரமுகர்கள் சட்டக்கல்லூரி வல்லுநர்கள், கல்விமான்கள் உட்பட பெரும் எண்ணிக்கையானோர் திறப்பு விழா நிகழ்வில் கலந்து கொண்டனர்.

(உ-ஐ)

## செல்லச்சாமிக்கு நியமனம் வழங்க தொண்டா எதிர்ப்பு

### ஐ.தே.கவுக்கு பெரும் நெருக்கடி

கொழும்பு, ஜூலை 4

ராஜாங்க அமைச்சர் செல்லச்சாமியை மீண்டும் ஐ.தே.க. வேட்பாளராக நியமிப்பதற்கு அமைச்சர் தொண்டமான் பலத்த எதிர்ப்புத் தெரிவித்திருக்கிறார்.

இதனால் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப்பீடம் பலத்த நெருக்கடிக்குள் மாட்டிக் கொண்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இ.தொ.கா. பொதுச் செயலாளர் பதவியில் இருந்து நீக்கப்பட்ட செல்லச்சாமியும் அவரது நெருங்கியசகாக்களும் ஐ.தே.க. வேட்பாளராகப் போட்டியிட அனுமதி வழங்கக்கூடாதென்று இ.தொ.கா. திட்டவட்டமாக ஆளுங்கட்சிக்குத் தெரிவித்து விட்டது.

எனினும் தமக்கும் தமது ஆதரவாளர்களுக்கும் ஐக்கிய தேசிய கட்சி வேட்பாளர்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ஆளும் கட்சியின் முடிவில் 'செல்லாவின்' எதிர்காலம்!

### அவரே கூறுகிறார்

கொழும்பு, ஜூலை 4

வேட்பாளர் நியமனம் வழங்குவது குறித்து ஐக்கிய தேசியக்கட்சி எடுக்கும் முடிவிலேயே தமது அரசியல் எதிர்காலம் தங்கியிருப்பதாக ராஜாங்க அமைச்சர் செல்லச்சாமி தெரிவித்திருக்கிறார்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளர் பதவியில் இருந்து அண்மையில் வெளியேற்றப்பட்ட அவர் — ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் வேட்பாளராகத் தாம் போட்டியிடவிருப்பதாக வெளியான செய்தியை மறுத்தார்.

(எ)

## பருத்தித்துறையில் 2 மீனவர் கடற்படையினரால் கைது!

வடமராட்சி, ஜூலை 4

பருத்தித்துறைக் கடற்பகுதியில் தொழிலில் ஈடுபட்டிருந்த மீனவர் இருவர் நேற்றுக் காலை கடற்படையினரால் பிடித்துச் செல்லப்பட்டனர்.

நேற்றுக் காலை 6 மணியளவில் காங்கேசன்துறைப் பகுதியில் இருந்து வந்த 'டோரா' படகு ஒன்றிலிருந்து வடமராட்சியின் கரையோரப் பகுதிகள் மீது தொடர்ச்சியாகப் பீரங்கித் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இதனால் கடலில் தொழில் செய்துகொண்டிருந்த மீனவர்கள் தமது தொழிலைக் கைவிட்டு கரை திரும்பினர்.

அச்சமயம் இன்பருட்டி கடற்பகுதியில் தொழிலில் ஈடுபட்டிருந்த அதே இடத்தைச் சேர்ந்த — இரண்டு பிள்ளைகளின் தந்தையான — இராமலிங்கம் சாந்தகுமார் (வயது 27) என்பவரும் —

பருத்தித்துறை இறங்குதுறை கடற்பகுதியில் தொழி

(4 ஆம் பக்கம் பார்க்க)

## லலித் கொலையை விசாரிக்க ஜனாதிபதி ஆணைக்குழு!

முன்னாள் அமைச்சர் லலித் அத்துலத் முதலியின் படுகொலை பற்றி விசாரணை நடத்த மூன்று பேர் கொண்ட ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்றை நியமிக்க அரசு முடிவு செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

விசாரணை ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதியரசர்கள் இந்த ஆணைக்குழுவில் இடம் பெறுவர் என்று அரசுக் கட்... நியூஸ் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

## கொழும்பில் சில தினங்களில் 700 தமிழ் இளைஞர்கள் கைது

கொழும்பு, ஜூலை 4

கொழும்பு மாநகரிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் கடந்த சில தினங்களாக 700க்கு மேற்பட்ட தமிழ் இளைஞர்களும் யுவதிகளும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தற்போது காவலில் வைக்கப்பட்டுள்ள அவர்கள் அனைவரும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என்று இராணுவ மற்றும் பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்தனர்.

கொழும்பு நகரில் கடந்த வாரத்தில் ஆயுதங்கள், வெடிமருந்துகள் கண்டு பிடிக்கப்பட்டதாகக் கூறப்படும் சம்பவங்களை அடுத்தே தமிழ் இளைஞர்கள் பரவலாகக் கைது செய்யப்பட்டு வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

தமிழர்கள் பெருமளவில் வசிக்கும் பகுதிகளில் இரவிரவாகப் பொலிஸார் தேடுதல்களை மேற்கொண்டு வருகின்றனர்.

கொட்டாஞ்சேனை, மாளிகாவத்தை, பம்பலப்பிட்டி, மருதானை, வெள்ளவத்தை, புறக்கோட்டைப் பகுதிகளிலேயே அதிகமான தமிழர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

## தெற்கு அரசியல் தலைமையே விடுதலைப்புலிகளின் இலக்கு

### புலனாய்வில் கண்டுபிடிப்பாம்

கொழும்பு மாநகரில் நடமாடும் விடுதலைப் புலிகளின் தாக்குதல் பிரிவு அரசியல் தலைவர்கள் மற்றும் முக்கிய அரச அதிகாரிகளை இலக்கு வைத்து செயல்படுகின்றது என்று பொலிஸ் புலனாய்வுப் பிரிவினர் கண்டுபிடித்துள்ளனராம். இத்தகவலை 'த ஐலண்ட்' பத்திரிகை வெளியிட்டிருக்கிறது.

அரசியல் தலைமைத்துவத்தைப் பலவீனப்படுத்தி, நாட்டைக் குழப்ப நிலைக்குள்ளாக்கும் நோக்குடனேதான் இத் தாக்குதல்கள் பொதுத் தேர்தல் காலத்தில் நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளன என்பது தெரியவந்திருப்பதாக உயர்நிலை புலனாய்வு அதிகாரிகளை மேற்கோள்காட்டி அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

கடந்த ஆண்டு நடைபெற்ற மாகாணசபைத் தேர்தலின் போது இது மாதிரியான தாக்குதல்கள் நடத்தப்பட்டன என்றும் —

அப்போது லலித் அத்துலத் முதலி மற்றும் ஜனாதிபதி பிரேமதாஸா படுகொலை செய்யப்பட்டனர் என்றும் அதிகாரிகள் மேலும் தெரிவித்தனர்.

(எ)

## நாளை விடுமுறை

யாழ்ப்பாணம், ஜூலை 4

கரும்புலிகள் தினமான நாளை செவ்வாய்க்கிழமை வர்த்தக விடுமுறை தினமாகும். வடபிராந்திய வர்த்தக சங்கங்களின் சமாசத்தினைச் சேர்ந்த வர்த்தக நிலையங்கள் யாவும் நாளை மூடப்பட்டிருக்கும்.

(ஐ-4)

## கோமாரி, ருகுணு புதன் வரும்

வடமராட்சி, ஜூலை 4

உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களுடன் 'கோமாரி', 'ருகுணு' கப்பல்கள் எதிர்வரும் புதன்கிழமை பருத்தித்துறைக்கு வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

திருகோணமலையில் இருந்து 8 ஆயிரம் மெற்றிக் தொன் மாவுடன் 'கோமாரி' கப்பலும் —

கொழும்பிலிருந்து சைக்கிள்கள் மற்றும் அத்தியாவசியப் பொருள்களுடன் 'ருகுணு' கப்பலும் —

பருத்தித்துறைக்கு வந்து சேரவிருக்கின்றன.

(உ-3-173)

## கொழும்புக்கு பணம்

யாழ்ப்பாணம், ஜூலை 4

யாழ். மக்கள் வங்கிக்கிளைகளில் இருந்து இரண்டரைக் கோடி ரூபா திரவப்பணம் நேற்று 'மாஹோ' கப்பல் மூலம் கொழும்புக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

[உ-173]

## புலிகள் வாங்கியதாகக் கூறப்படும் லொறியைக் கண்டுபிடிக்க கொழும்பில் தீவிர தேடுதல்!

கொழும்பு, ஜூலை 4

விடுதலைப் புலிகள் கொழும்பில் மூன்று வாரங்களுக்கு முன்னர் ஐந்து லட்சம் ரூபாவுக்கு வாங்கியதாகக் கூறப்படும் லொறி ஒன்றைக் கண்டுபிடிப்பதில் இராணுவமும் பொலிஸாரும் தீவிரமாக ஈடுபட்டு உள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் கொள்ளுப்பிட்டியில் இராணுவ வாகனம் ஒன்றைப் பின்தொடர்ந்து வந்த ஜீப்பையும் இந்த லொறியை வாங்கிய குழுவினரே வாங்கியதாகவும் பொலிஸார் கூறினார்.

கொழும்பில் வாங்கப்பட்ட இந்த லொறி யாழ்ப்பாணத்துக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் — அது கொழும்புக்கு கொண்டுவரப்பட இருப்பதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

தெஹிவளையில் அண்மையில் ஒரு வீட்டில் இருந்து 300 கிலோ வெடிப்பொருள்கள் கைப்பற்றப்பட்டது தொடர்பாக கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்களே இந்த லொறியை வாங்கினார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

## புலிகளின் தாக்குதலுக்கு அஞ்சி விமானப்படை அலுவலகம் தற்காலிகமாக மூடப்படும்

நாளை கரும்புலிகள் தினத்தன்று விடுதலைப் புலிகள் கொழும்பில் பல்வேறு தாக்குதல்களை நடத்தக்கூடும் என அஞ்சும் ஸ்ரீலங்கா அரசு—

முன்னேற்பாடாக கொழும்பில் உள்ள விமானப்படையின் தலைமை அலுவலகத்தை தற்காலிகமாக மூடும் என்று தெரியவருவதாக செய்தி ஏஜென்ஸி ஒன்று அறிவித்தது.

புலிகளின் தாக்குதலுக்கு அஞ்சி கொழும்பில் உள்ள பாதுகாப்புத்துறை அலுவலகங்களின் பாதுகாப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. படை அதிகாரிகள் மற்றும் அரசியல்வாதிகளுக்கு வழங்கப்படும் பாதுகாப்பும் அதிகரிக்கப்பட்டுள்ளது என்று அறிவிக்கப்படுகிறது.

(உ-3)

## தமிழகத்தில் இருந்து திரும்பிய அகதிகள் நிலையை அறிய 3 குருமார் யாழ். வருகை

யாழ்ப்பாணம், ஜூலை 4

தமிழகத்தில் இருந்து இலங்கை திரும்பியுள்ள ஈழத் தமிழ் அகதிகளின் நிலைமையை நேரில் கண்டறிய இந்தியாவில் இருந்து மூன்று கத்தோலிக்க குருமார் யாழ்ப்பாணம் வந்துள்ளனர்.

இலங்கைக்கு திரும்பியுள்ள அகதிகளின் வாழ்க்கை நிலை, அவர்களின் பாதுகாப்பு நிலை ஆகியவற்றை நேரில் கண்டறியும் நோக்குடனே இவர்கள் இங்கு வந்திருப்பதாகக் கூறப்பட்டது.

வவுனியா, கிளிநொச்சி, மடு பகுதிகளில் உள்ள அகதிகளையும் இவர்கள் சந்தித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. இவர்கள் மூவரும் யாழ் ஆயர் இல்லத்தில் தங்கியுள்ளனர்.

(உ-3)

## ஈழ அகதிகளைத் திருப்பி அனுப்ப ஸ்ரீலங்காவுடன் ஒப்பந்தம் டென்மார்க் அரசு முடிவு

கொழும்பு, ஜூலை 4

டென்மார்க்கில் உள்ள இலங்கைத் தமிழ் அகதிகளைத் திருப்பி அனுப்புவது தொடர்பாக டென்மார்க் அரசும் இலங்கை அரசும் விரைவில் உடன்படிக்கை ஒன்றைச் செய்து கொள்ளவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அகதிகளைத் திருப்பி அனுப்புவது தொடர்பாக சுவிட்ஸர்லந்தும் இலங்கையும் செய்து கொண்ட உடன்பாடு போன்றதாக இதுவும் அமையும் என்று அறிவிக்கப்படுகிறது.

பொருளாதாரக் காரணங்களுக்காக நாட்டுக்குள் சட்டவிரோதமாக பிரவேசித்து அரசியல் தஞ்சம் கோரிய இலங்கைத் தமிழ் அகதிகளைத் திருப்பி அனுப்புவது என்று டென்மார்க் அரசு தீர்மானித்துள்ளதாகவும் அறிவிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

இந்தியன் அயன் சேவ் (Iron Sabe) விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: இல. 140, நாவலர் றோட், யாழ்ப்பாணம். (மனோகரா தியேட்டர் அருகில்) (31740)

### தேவை

"சன் பிறான்ட்" இனிப்பு, டொபி வகைகள் சொந்த மிதிவண்டியில் சென்று விற்பனை செய்யக்கூடியவர்கள் தேவை. முற்பணம் செலுத்தக் கூடியவர்கள் வேலை நாட்களில் நேரில் தொடர்பு கொள்ளவும். அவைவ, கொன்பக்ஷன றீஸ், பரமானந்தம் மில் கட்டடம், தாவடி, மானிப்பாய் சாலை, கொக்குவில். (31667)

நல்ல பழக்கவழக்கமுள்ள பெண் கொம்போசிட்டர், பைண்டர், வேலைபழக ஆர்வமுள்ளவர்கள் தேவை; நேரில் வரவும். இல. 23, சிவன் பண்ணை வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம். (7500)

### பெயர்மாற்றம்

ஸ்ரீ லங்கா அச்சகம், ஸ்ரீகாந்தா அச்சகம் ஒன்றிணைந்து இளங்கயன் பதிப்பகம் என்ற பெயரில் சேவையாற்றுகிறது. இளங்கயன் பதிப்பகம், பதிப்பகசாலை, ராஜா தியேட்டர் அருகில், யாழ்ப்பாணம். (31668)

### ஆனந்தம் சீயாக்காய்

எமது உடம்புக்கு சிரசே பிரதானம். ஆயுர்வேதமருத்துவ முறைப்படி தயாரிக்கப் பெற்ற ஆனந்தம் சீயாக்காய் பவுடர் என்று கேட்டுவாங்கி பயன் பெறவும். (7486)

### பௌதிகவியல் A/L

பௌதிகவியல் A/L 95/96 தூயகணிதம், பிரயோக கணிதம் தனிப்பட்ட முறையில் மிகச் சிறப்பாக ஏராளமான பயிற்சியோடு அனுபவம் பெற்ற ஆசிரியரினால் கற்பிக்கப்படும் R. பாலசுப்பிரமணியம் B Sc.(Cey ) Dip-in-Ed 17/1, பிறவுண்வீதி, யாழ்ப்பாணம். (7499)

### கட்டுரை மலர்

காலத்துக்கு ஏற்ற வெளியீடு. சகல புத்தகசாலைகளிலும் விற்பனையாகின்றது. சசி மாஸ்ரரின் மாணவர் கட்டுரை மலர் 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை மாணவர்களுக்கும் 6 ஆம், 7 ஆம், 8ஆம் வகுப்பு மாணவர்களுக்கும் உகந்தது: (31545)

## ஆரியரத்னவுக்கு எம். பியாகும் வாய்ப்பு!

சர்வோதய இயக்கத் தலைவர் டாக்டர் ஏ. ரி. ஆரியரத்தினா ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப்பட்டியல் மூலம் எம். பியாக நியமிக்கப்படவிருக்கிறார்.

ஐக்கிய தேசியக் கட்சி வட்டாரங்கள் இத்தகவலை தெரிவித்தன.

கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தில் குழுக்களின் உப தலைவராக இருந்த ஆரியரேக்காவ, விக்ரம வீரசூரியா ஆகியோரும் ஐ. தே. க. தேசியப்பட்டியல் எம். பிக்களாக இடம்பெறுவர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## சாவகச்சேரியில் கலப்பட நல்லெண்ணெய்

சாவகச்சேரி சந்தைக் கடைகளில் கலப்படம் செய்யப்பட்ட இருபது போத்தல் நல்லெண்ணெய் சாவகச்சேரி பொது சுகாதார பரிசோதகரால் கைப்பற்றப்பட்டது.

பொது சுகாதார பரிசோதகர் கடந்த வியாழக் கிழமை சந்தைக் கடைகளில் மேற்கொண்ட திடீர் பரிசோதனையின் போது கலப்பட நல்லெண்ணெய் போத்தல்கள் கண்டு பிடிக்கப்பட்டன. (ஓ—31)

## ராஜினாமா

கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தில் சுதந்திரக்கட்சியின் தேசியப்பட்டியல் எம்.பியாக இருந்த திரு. எஸ். எல். குணசேகரா சுதந்திரக்கட்சியில் இருந்து ராஜினாமாச் செய்தார்.

தாம் அரசியலுக்கு முழுக்குப் போடுவதாகவும் அவர் விடுத்த அறிக்கையில் தெரிவித்தார்

---

# கரும்புலிகள் நினைவு உருவப்படம் திரைநீக்கும் வைபவம்

யாழ்ப்பாணம் சிலன்தெருச் சந்தியில் (முலவைச் சந்தி) அமைக்கப்பட்ட கரும்புலிகளின் உருவப்படம் **05-07-94** செவ்வாய்க்கிழமை காலை 9-00 மணிக்கு திரைநீக்கம் செய்து கரும்புலிகளின் நினைவுரைகளும் நடைபெறும். அனைத்து வணிகப் பெருமக்களும், ஊழியர்களும் பொதுமக்களும் மேற்படி நிகழ்வில் வருகைதந்து நிகழ்ச்சிகளை சிறப்பிக்குமாறு கழகத்தின் சார்பில் அன்புடன் அழைக்கிறோம்.

நிகழ்ச்சி நிரல்

(1) ஈகைச்சுடர் ஏற்றல்
(2) தேசியக்கொடி ஏற்றல்
(3) மௌன அஞ்சலி
(4) கரும்புலிகள் நினைவுச் சொற்பொழிவு
(5) நன்றியுரை

**யாழ் வணிகர் கழகம்**
21, மேல்மாடி, சிறப்பு அங்காடி
யாழ்ப்பாணம்.

(சி-8589)

---

உ

# திருமண அழைப்பு

நிகழும் மங்களகரமான பவ வருடம் ஆனித் திங்கள் 22ஆம் நாள் (06-07-1994) புதன்கிழமை காலை 8-55 மணி முதல் 10-44 மணிவரையுள்ள சுபமுகூர்த்த வேளையில்,

| | |
|---|---|
| சாவகச்சேரி<br>திரு திருமதி க கனகரட்ணம் அவர்களின் சிரேஷ்ட புத்திரன்<br>திருநிறை செல்வன்<br>**கவீந்திரன்**<br>(Technician Germany)<br>அவர்களுக்கும் | கல்வியங்காடு<br>திரு. திருமதி பொ. பாலசுப்பிரமணியம் அவர்களின் சிரேஷ்ட புத்திரி<br>திருநிறை செல்வி<br>**நிரஞ்சலாதேவி**<br>(Germany)<br>அவர்களுக்கும் |

வவுனியா ஸ்ரீ கந்தசுவாமி கோயிலில் திருமணம் செய்து வைக்கப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால், அத்தருணம் தாங்களும் சுற்றம் சூழ வருகைதந்து மணமக்களை வாழ்த்தி அதனைத் தொடர்ந்து மணமகன் இல்லத்தில் நடைபெறவிருக்கும் விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கிறோம்

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்:

திரு திருமதி
க. கனகரட்ணம்,
"வசந்த மாளிகை"
அலைகரை வீதி, இறம்பைக்குளம்,
வவுனியா.

திரு. திருமதி
பொ. பாலசுப்பிரமணியம்,
"தேவர் பதி"
இறம்பைக்குளம்,
வவுனியா.

[31739]

---

# விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(O/L வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

**O/L**
DAY CLASSES (8-30 — 2-00)
SAT. SUN. CLASSES (8-00 — 2-00)
EVENING CLASSES (4-15 — 6-30)

## புதிய பிரிவுகள் ஆரம்பம்: 07-07-1994

★ திறமைக்கும் பிரபல்யமான திறமைமிக்க யாழ். முன்னணி ஆசிரியர் குழு.
★ வாராவாரம் இலவச Paper Classes நடைபெறுகின்றன.
★ மொத்தம் 9 பிரிவுகளில் வகுப்புகள் நடைபெறுகின்றன.

[சி-8618]

---

அமரர்
# திருமதி ஞானலக்ஷ்மி ஸ்ரீஸ்கந்தமூர்த்தி (B.A.)

(ஆசிரியை - நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயம்)

அவர்களின்

## நினைவு அஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும்



தவப்பேறு: 11 — 01 — 1960
சிவப்பேறு: 03 — 06 — 1994

இமைப் பொழுதும் எம் நெஞ்சில்
இறவா அன்பே

எங்கள் குடும்பத்துக் குல விளக்கின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை இன்று 04-07-94 திங்கள் பகல் 10 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் தாங்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தாயார், கணவன், மாமன், மாமி,
சகோதரர், மைத்துனர்.

'அம்பாள் அகம்'
மருதனார்மடம்,
இணுவில்.

(சி-8592)

---

# 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 21 — 03 — 1981
உதிர்வு: 18 — 06 — 1990

## செல்வன் திரவியம் கரண்டீபன்

(தீபன்)

(யாழ். இ. ஆ. பா - 4 ஆம் ஆண்டு மாணவன்)

திதி: 4 - 7 - 1994

ஆண்மகன் இல்லை என்ற குறையைப் பூர்த்தி செய்ய ஐந்தாவதாய் அவதரித்தாய்! ஒன்பது வருடம் தான் எங்களுடன் உறவாடி ஓடி மறைந்தாயே! நீ பிரிந்த நாள் முதல் நிம்மதியை நாம் இழந்து தவிக்கின்றோம்.

அப்பா, அம்மா,
அக்காமார், தம்பி.

மனோலி வீதி,
2 ஆம் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

(31726)

---

# 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 03 — 07 — 1914
மறைவு: 25 — 06 — 1984

## அமரர் விசுவலிங்கம் அன்னபூரணி

(அளவெட்டி தெற்கு)

திதி ஏகாதசி: 04 - 07 - 1994

அன்பும் அறிவும் அருமைப் பண்பும் நிறைந்த எங்கள் குடும்ப விளக்கே! எந்தவித துன்பங்களும் எம்மை அணுகாமல் வாழவைத்த தெய்வமே! நீங்கள் எங்களை விட்டு பிரிந்து பத்து ஆண்டுகள் ஓடி மறைந்தாலும் உங்கள் நினைவு என்றும் அகலாது. உங்கள் ஆன்மா சாந்தியடைய உங்கள் குல தெய்வமாகிய பெருமாக்கடவை வீரபத்திரப் பெருமானை வேண்டுகின்றோம்.

கணவன், மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

அன்னகிரி,
அளவெட்டி தெற்கு.

(7498)

---

யாழ்ப்பாணம்
பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
வரைவுள்ளது

# "வெதுப்பகம்"
## மங்களகரமான திறப்பு விழா

எதிர்வரும் 1994-07-06 ஆம் திகதி காலை 6-30 மணியளவில் கனகரட்ணம் வீதி, அரியாலையில் எம்மால் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள வெதுப்பகத்தை யாழ்ப்பாணம் ப.நோ.கூ.சங்க பொது முகாமையாளர் உயர்திரு. த. பரஞ்சோதி அவர்கள் திறந்து வைப்பார். அவ்வமயம் அனைவரும் வருகை தந்து சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

## மக்களின் தேவையில் எங்கள் சேவைகள்

- பாண்
- ரோஸ் பாண்
- அடைக்கேக்
- தேநீர் பணிஸ்
- பட்டர் பாண்
- கேக் வகை
- கல் பணிஸ்

மற்றும் சிறியவர், பெரியவர்கள் விரும்பி சுவைக்கும் பிஸ்கட் வகைகள்

தரமானவை/மலிவானவை/சுத்தமானவை

## "வெதுப்பகம்" யாழ்ப்பாணம் ப.நோ கூ. சங்கம்

தலைவர்,
பணிப்பாளர்கள், பணியாளர்கள்.

1994-07-02.

(சி-8588)

---

சகல பனை. தென்னை வள
அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும்,
கொத்தணிகளுக்குமான

# முக்கிய அறிவித்தல்

கரும்புலிகளை நினைவு கூரும் நாளான யூலை 5 ம் திகதி எமது சகல கிளை நிலையங்களிலும், கொள்வனவை மட்டும் நடைமுறைப்படுத்துமாறு கேட்டுக் கொள்வதுடன், அன்றைய விசேட பொது நிகழ்வுகளில் சகல அங்கத்தவர்களும் பணிப்பாளர்களும், பணியாளர்களும், மகளிர் குழுக்களும் தவறாது கலந்து சிறப்பிக்கும் வண்ணம் கேட்டுக் கொள்கிறோம்.

பொதுமுகாமையாளர்,
வடமாகாண ப. தெ. வ.
அ. கூ. ச. சமாசம்

[இ/8591]

---

# 95th BIRTHDAY



**REV. LOUIS NAVARATNAM HITCHCOCK**

BORN: 04 — 07 — 1899
AT REST: 02 — 09 — 1993

Nine months ago you left us.
Happy Birthday Daddy Dear,
Though your place is vacant
We Feel your presence here.

All at Rajasthan,
Manipay.

[7954]

---

# 3 ஆம் ஆண்டு கண்ணீர் அஞ்சலி



மலர்வு: 12 — 07 — 1938
மறைவு: 04 — 07 — 1991

## அமரர் இராசையா தங்கராஜா

திதி: 15 - 07 - 1994

கற்பனைக்கு எட்டாத வாழ்வினைத் தந்து விட்டு கண்ணீரில் மூழ்கவிட்ட அப்பா - உங்கள் ஆத்மா சாந்தியடைவதாக.

தாய், மனைவி,
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

198, கஸ்தூரியார், வீதி
யாழ்ப்பாணம்.

(31741)

Digitized by Noolaham Foundation

உதயன்
292/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## தொண்டாவுக்கு என்ன அருகதை?

அமைச்சர் தொண்டமான் யாழ்ப்பாணம் வருவதற்கு விரும்புகிறாராம். இது குறித்து அவர் விடுதலைப் புலிகள் தலைவர் திரு. வே. பிரபாகரனுக்கும் கடிதம் எழுதியிருப்பதாகத் தகவல்கள் வெளிவந்திருக்கின்றன.

ஒரு தமிழன் என்ற வரையில், முதிர்ந்த அரசியல்வாதி என்ற வகையில், எது எப்படியானாலும் மலையகத் தமிழர்களின் தலைவர் என்ற வகையில், அவர் யாழ்ப்பாணத்துக்கு வருகை தருவதனை இங்குள்ள மக்கள் ஆட்சேபிக்கப் போவதில்லை.

இங்கு வாழும் தமிழ் மக்களின் மனநிலை என்ன, அவர்கள் படும் அவலங்கள் எவை, அரசாங்கம் பலவகைகளாலும் விதிக்கும் அடக்குமுறைகளையும், வாழ்க்கைத் தடைகளையும் அவர்கள் எவ்வாறு எதிர்கொள்கிறார்கள் என்பனவற்றைக் கண்டறிய விரும்பின் அவர் தாராளமாக வரலாம்.

ஆனால் தொண்டமான் இங்கு வருவதற்கு விரும்புவது எப்போதும் அரசியல் நோக்கத்துடனேயே சேர்ந்து கொள்கிறது.

பிரேமதாசா ஜனாதிபதியாக இருந்த போது, 1992 இல் இனப்பிரச்சினைக்கான ஒரு தீர்வு யோசனையைத் தானே தயாரித்து அது குறித்து விடுதலைப் புலிகளுடன் பேசி அவர்களது நிலைப்பாட்டை அறிய விரும்புவதற்காக இங்கு வர விரும்பியவர் தொண்டமான்.

அதனை விடுதலைப்புலிகள் வரவேற்றார்கள். ஆனால் அரசாங்கம் அனுமதிக்கவில்லை. அதனால் அவர் இங்கு வருகை தரமுடியவில்லை. அவர் தயாரித்த அந்தத் திட்டத்தை நாடாளுமன்றத் தெரிவுக்குழு கூட ஏற்றெடுத்தும் பார்த்ததில்லை. அவரது யோசனை இப்போது எந்தக் கிடப்பில் கிடந்து தூங்குகின்றதோ என்பது அவருக்குத் தான் வெளிச்சம்!

தேர்தலை முன்விட்டு, தாமும் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரப்பும் சேர்ந்து தயாரித்த புதிய தீர்வுத் திட்டம் குறித்து விடுதலைப் புலிகளுடன் பேசவதே — அவர்களின் நிலைப்பாட்டை அறிந்து செல்வதே — இம்முறையும் தொண்டமான் யாழ்ப்பாணம் வர விரும்புவதன் நோக்கமாக உள்ளதாம்.

இத்தனைக்கும், தாம் கூட்டாகத் தயாரித்த புதிய தீர்வுத் திட்டத்தை ஆளுங்கட்சி ஏற்றுக் கொண்டதா இல்லையா என்பது குறித்து அதன் தலைவரான ஜனாதிபதி முடிவு சொல்வதற்கு முன்னரே, தொண்டமான் அக்கட்சியுடன் தசையும் இரத்தமுமாக இணைந்து கொண்டார். யானைச் சின்னத்திலேயே தேர்தலுக்கும் நிற்கப்போகிறார்!

அதனால் ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனமே இனரது உத்தியோக பூர்வ தேர்தல் விஞ்ஞாபனமாக அமையப்போகிறது. ஐக்கிய தேசியக் கட்சியினரோ நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்குத் தமிழர் தாயகத்தை உடைத்து நொறுக்கும் யோசனையையே இனப்பிரச்சினைக்கான தமது தீர்வாக முன்வைக்கப் போகிறார்கள்.

தன் நிலைமை அவ்வாறிருக்கையில், வடக்கு-கிழக்கு இணைந்த பிராந்திய சபை யோசனை குறித்தும் பேசுவதற்குத் தொண்டமானுக்கு என்ன அருகதை உண்டு? ஐ.தே. கட்சியின் சின்னத்திலேயே இ.தொ.கா.வும் தேர்தலில் போட்டியிடும் என்று அறிவித்த கணத்திலிருந்தே அவர் அந்த உரிமையை இழந்து விட்டார்!

எனவே, அவர் யாழ்ப்பாணம் வந்து தொண்டா - அஷ்ரப் யோசனை குறித்து விடுதலைப் புலிகளுடன் பேச விரும்புவது அர்த்தமற்றதும், வேடிக்கையானதும் மிகுந்ததும் ஆகும்.

இனியும் அவர் யாழ்ப்பாணம் வந்து விடுதலைப் புலிகளுடன் பேச விரும்புவதாகக் கூறுவது, தேர்தலை பகிஷ்கரிக்காதீர்கள், தேர்தல் நடப்பதற்கு உதவுங்கள் என்று கேட்பதற்காகவே அன்றி வேறு குறிக்கோளுடன் அல்ல என்றே கொள்ள வேண்டும்.

## இலங்கை வங்கி சுன்னாகம் கிளை வெள்ளிவிழா

யாழ்ப்பாணம், ஜூலை 4
இலங்கை வங்கியின் சுன்னாகம் கிளையின் "வெள்ளி விழாவை" முன்விட்டு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள முதலாவது நிகழ்வு இன்று திங்கட்கிழமை காலை 8.00 மணிக்குக்கிளை முகாமையாளர் திரு. எஸ். விக்னராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

இலங்கை வங்கியின் யாழ். பிரதேச முகாமையாளர் திரு. கே. கணேசமூர்த்தி பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

மதத் தலைவர்களின் ஆசியுரைகளும், பல்துறை வாடிக்கையாளர்களின் வாழ்த்துரைகளும் அங்கு இடம் பெறவுள்ளன. (ஓ - ஐ - 158)

# 400 தொன் விதை உருளைக்கிழங்கு இவ்வாண்டு தருவிக்க நடவடிக்கை

### யாழ். மாவட்ட விவசாயக் குழுவில் முடிவு

யாழ்ப்பாணம், ஜூலை 4
இவ்வருடம் நானூறு மெற்றிக் தொன் விதை உருளைக்கிழங்கை ஹொலண்ட் நாட்டில் இருந்து தருவிப்பது என்று யாழ். மாவட்ட விவசாயக் குழு தீர்மானித்துள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை யாழ். செயலகத்தில் நடைபெற்ற குழுவின் கூட்டத்திலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டது.

இக்கூட்டத்திற்கு யாழ் அரச அதிபர் திரு கா. மாணிக்கவாசகர் தலைமை வகித்தார். விவசாயத் திணைக்களத்தைச் சேர்ந்த அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

சென்ற ஆண்டிலும் பார்க்க கூடுதலான விவசாயிகள் விதை உருளைக்கிழங்கு கோரி இம்முறை விண்ணப்பித்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது:

கடந்த ஆண்டு 155 மெற்றிக் தொன் டிசிறி இன விதை உருளைக்கிழங்கே ஹொலண்ட் நாட்டில் இருந்து தருவிக்கப்பட்டது.

இந்த ஆண்டில் 200 மெற்றிக் தொன் டிசிறி இனமும் 200 மெற்றிக் தொன் ஆர்க்கா இனம் உருளைக்கிழங்கும் தருவிக்கப்படவுள்ளன. (எ-4)

## தண்ணீர் தாங்கி உண்ணா விரதம் தொடர்கிறது

தமது வேலையை நிரந்தரமாக்குமாறு கோரி எம்பிலிப்பிட்டிய மகேசியா தடுப்புப் பிரிவைச் சேர்ந்த 10 சமயாசமய ஊழியர்கள் எம்பிலிப்பிட்டிய ஆஸ்பத்திரி வளவில் உள்ள தண்ணீர் தாங்கி ஒன்றின் மீது ஏறி உண்ணாவிரதப்போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த 29 ஆம் திகதி அவர்கள் தமது உண்ணா விரதத்தை ஆரம்பித்தனர். உண்ணாவிரதிகளில் மூவரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாக நேற்று அறிவிக்கப்பட்டது. (இ-ஐ-6)

## ஆசிரியைகளுக்கு மறுக்கப்பட்ட உரிமையை வழங்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 4
சகல பயிலுநர் ஆசிரியர்களுக்கும் பட்டதாரி பயிலுநர் ஆசிரியர்களுக்கும் ஏனைய நிரந்தர ஆசிரியர்கள், அரச ஊழியர்களைப்போல —

முதல் இரண்டு மகப்பேறுக்கும் 84 வேலை நாட்கள் மகப்பேற்று லீவாகவும் —

ஏனைய மகப்பேற்றுக்கு 42 வேலை நாட்கள் மகப்பேற்று லீவாகவும்

பெறும் உரிமையை வழங்கும்படி இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப்பொதுச் செயலாளர் திரு. த. மகாசிவம் யாழ். வலய கல்விப் பணிப்பாளர்களைக் கடிதமூலம் கோரியுள்ளார்.

இதுதொடர்பான 1990ஆம் ஆண்டின் சுற்றுநிருபத்தையும் அவர் கல்விப் பணிப்பாளர்களுக்கு அனுப்பியுள்ளதாக அறிவித்துள்ளார்;

84 நாள் மகப்பேற்று லீவைப் பெற்றமைக்காக சம்பளமற்ற லீவு வழங்கப்பட்டிருந்தால் அதை வாபஸ் பெற்று கழிக்கப்பட்ட வேதனத்தை மீள வழங்க நடவடிக்கை எடுக்குமாறும் கடிதத்தில் கோரப்பட்டுள்ளது.

1990 ஆம் ஆண்டின் சுற்று நிருபம் தமக்குக் கிடைக்கவில்லை என்று காரணம் காட்டி யாழ். மாவட்டத்தில் பெண் பயிலுநர் ஆசிரியர்களுக்கு இந்த உரிமை மறுக்கப்பட்டு வந்துள்ளமை வருந்தத்தக்கூடியதும் கண்டிக்கப்பட வேண்டியதும் ஆகும்.

பயிலுநர் ஆசிரியர் உட்பட 5 மாதக் கர்ப்பிணியான சகல பெண் ஆசிரியைகளுக்கும் நாள்தோறும் அரை மணி நேரம் பாடசாலைக்கு தாமதித்து சமூகமளிக்கவும், பாடசாலை முடிவதற்கு அரைமணி நேரம் முன்னதாகச்செல்லவும் உரிமை உண்டு என்று கூறும் சுற்று நிருபத்தின் பிரதியும் இக்கடிதத்துடன் அனுப்பப்பட்டுள்ளது. (க)

### யாழ். பாடசாலைகளில்

## நூலக அபிவிருத்திக்கு கல்விப் பகுதி நிதி உதவி

### கோட்டத்துக்கு 1 லட்சம் ரூபா வீதம்

வலிகாமம் தெற்கு, ஜூலை 4
யாழ்ப்பாணம் மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளில் மாணவர்களின் கல்வித்தர வளர்ச்சிக்கும், வாசிக்கும் பழக்கத்தை ஏற்படுத்தவும் பாடசாலைகளில் இயங்கும் நூலகங்கள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

நூலகத்துக்கு தேவையான நூல்களை கொள்வனவு செய்வதற்கு தேவையான நிதியுதவியை வழங்க யாழ்ப்பாணம் கல்வித் திணைக்களம் முயற்சிகள் மேற்கொண்டுள்ளது.

இதற்கென ஒவ்வொரு கல்விக்கோட்டத்துக்கும் ஒரு லட்சம் ரூபா வழங்கப்பட்டுள்ளதாகவும்—

கோட்டங்களூடாக இந் நிதி பாடசாலைகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட உள்ளதாகவும் தெரியவருகின்றது. (எ-152)

## அரசியலில் கண்ணீர் சிந்தும் விதவைகள்

### ஹேமா குறித்து ஒப்சேர்வர்

கொழும்பு, ஜூலை 04
இலங்கை அரசியல் அரங்கில் இன்னொரு கண்ணீர் விடும் விதவை மேடையேறும் காலம் நெருங்கிவிட்டதா?

அரசுக்கட்டுப்பாட்டில் உள்ள சண்டே ஒப்சேர்வர் பத்திரிகை ஹேமாவின் அரசியல் பிரவேசம் பற்றி முன் கண்டவாறு எழுதியுள்ளது.

'கட்டி'தவாரம் மாவனல்லையிலும் கொலன்னாவையிலும் ஜனாதிபதி விஜேதுங்கா தலைமையில் நடந்த இரண்டு பிரேமதாஸா சிலை திரைநீக்க நிகழ்ச்சிகளில் ஹேமா கலந்து கொண்டார்.

ஹேமா இக் கூட்டங்களில் தமது உள்ளத்தைத் திறந்து உணர்ச்சிகளைக் கொட்டினார்.

தமது கணவரின் படுகொலை குறித்து விசாரணை ஒன்றை ஆரம்பிக்குமாறு ஹேமா ஜனாதிபதியைக் கேட்டுக் கொண்டார்.

இமெல்டா மார்கோஸ் போன்று தமது கணவரின் அரசியலை/தொடர்ந்து முன்னெடுத்துச் செல்ல ஹேமா உறுதி பூண்டுள்ளார் என்று தெரிகிறது.

ஹேமா மக்களின் உள்ளங்களை கவ்வி இழுக்கக் கூடிய பேச்சுவன்மை நிறைந்த, உள்ளத்தால் பேசக் கூடிய பேச்சாளராக மாறியிருப்பதுதான் மிகவும் குறிப்பிடத்தக்க அம்சமாக உள்ளது.

அரசியல் அரங்கில் இன்னொரு அழுதகண்ணீருடன் தோன்றும் விதவையைக் காணும் கட்டம் நெருங்கி விட்டதா?

துக்ககரமான சூழ்நிலைகளில் கணவர்களை இழந்த விதவைகள் அதிக எண்ணிக்கையில் அரசியல் போராட்டத்தில் இறங்கியுள்ள ஒரே ஒரு நாடாக இலங்கைதான் உலகில் இடம் பெறப்போகின்றது.

இவர்களை உலகம் நம்புகின்றதோ, இல்லையோ, இலங்கையில் மக்கள் பெரும் எண்ணிக்கையில் திரண்டு வந்து வெள்ளை நிறச் சேலையணிந்த இப் பெண்களைப் பார்க்கத்தான் போகின்றனர் — இவ்வாறு சண்டே ஒப்சேர்வர் ஹேமாவின் உத்தேச அரசியல் பிரவேசம் பற்றி எழுதியுள்ளது. (இ-எ)

### திருவிழாக் காலங்களில்

## திறந்த நிலையில் விற்கப்படுகின்ற உணவுப் பொருள் பறிமுதலாகும்!

### அதிகாரிகள் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 4
ஆலயத் திருவிழாக்களின் போது, ஆலய வீதிகளில் திறந்த நிலையில் இனிப்பு மற்றும் உணவுப் பொருட்களை விற்போர்மீது கடும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இத்தகவலை வட பிராந்திய உணவு, மருந்து பரிசோதகர் திரு. ரி. மகாதேவன் தெரிவித்திருக்கிறார்;

திருவிழாக் காலங்களில் மூடிய கண்ணாடிப்பெட்டிகளினுள் உணவுப் பொருள்களை வைத்து விற்பனை செய்ய வேண்டும் என்றும்—

திறந்த நிலையில் உணவுப் பொருள்களை விற்பனை செய்வோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் சுகாதாரப் பகுதியினர் எச்சரித்துள்ளனர்.

இதேவேளை அண்மையில் இணுவில் கந்தசுவாமி கோயில் வீதியில் திறந்த நிலையில் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த உணவுப் பொருள்கள் கண்டுபிடிக்கப்பட்டு, அவை நிலத்தில் வெட்டிப் புதைக்கப்பட்டன என்றும் தெரிவிக்கப்படுகிறது. (எ-162)

## பிளாம்பயான் கப்பலில் செல்லக் கட்டுப்பாடு!

யாழ்ப்பாணம், ஜூலை 4
திருகோணமலைக்கும்-பருத்தித்துறைக்கும் இடையில் சேவையில் ஈடுபடும் 'பிளாம்பயன்' கப்பலில் பயணம் செய்வோருக்கு கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது.

அவசர நோயாளர்கள் மற்றும் குடும்பத்துடன் சேர்வோர் மட்டுமே இக்கப்பலில் செல்ல அனுமதிக்கப்படுவர் என்றும் —

இக்கப்பலில் பயணம் செய்வோர் பற்றிய விவரங்களை தாமே பரிசீலித்து அனுமதி வழங்குவதாகவும் - செஞ்சிலுவைச் சங்க அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை— யாழ். அரச அதிபர் அலுவலக வேலையாக கொழும்பு சென்று திரும்ப இக்கப்பலில் ஓர் ஆசனத்தை ஒதுக்கி வைக்க இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் அந்த அதிகாரி தெரிவித்தார். (எ 3)

## தமிழ் இலக்கிய வளர்ச்சியில் பண்டிதமணி முக்கியமானவர்

### நினைவு வைபவத்தில் உரை

யாழ்ப்பாணம், ஜூலை 4
"யாழ்ப்பாணத் தமிழ் இலக்கிய வளர்ச்சியில் பண்டிதமணி முக்கிய இடத்தை வகிக்கின்றார். புராண இதிகாசங்கள் சைவசித்தாந்தம் என்பனவரை நாவலர் போன்று ஒருவர் உருவாக வேண்டும் என்று பண்டிதமணி தெரிவித்தார். பண்டிதமணி போன்ற ஒரு சிறந்த கவிமானும் உருவாக வேண்டியது அவசியம்"

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை நினைவுக் காப்பு நிதியத்தால் நடத்தப்பட்ட பண்டிதமணி நினைவு விருது வழங்கும் நிகழ்ச்சியில் விருது பெற்ற நூலாசிரியர் பண்டிதர் மு. கந்தையா இவ்வாறு கூறினார்;

"திருக்கேதீச்சர மான்மியம்" நூலுக்கு பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை நினைவுக் காப்பு நிதியத்தின் 1994 ஆம் ஆண்டுக்கான விருது அவருக்கு வழங்கப்பட்டது.

யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெற்ற மேற்படி நிகழ்வுக்கு யாழ். பல்கலைக்கழக நுண்கலைத்துறைத் தலைவர் பேராசிரியர் கா. சிவத்தம்பி தலைமை வகித்தார்;

"தமிழ் இலக்கியத்தின் மகிமையை முழுமையாக உலகறியச் செய்தவர் பண்டிதமணி கணபதிப்பிள்ளை ஆவார். " என்றும் பண்டிதர் கந்தையா தெரிவித்தார்.

பேராசிரியர் சிவத்தம்பி தமது தலைமை உரையில் கூறியதாவது.

யாழ்ப்பாணச் சைவத் தமிழிலக்கிய பாரம்பரியத் தொடர்ச்சியிலும் வளர்ப்பிலும் பண்டிதமணி வகித்த இடம்பற்றி எடுத்துக் கூறுவது ஈழத்து இலக்கிய "வரலாற்று மரபாகியுள்ளது;

அவரின் நினைவுக் காப்பு நிதியம் சிறந்த தமிழ் நூல்களுக்கு விருது வழங்குவது மிகவும் பொருத்தமானது.

சைவ சித்தாந்தம் பற்றிய ஆழமான அறிவும் தெளிவான பார்வையும் கொண்ட பண்டிதர் கந்தையாவின் சிந்தனையில் கிடைத்த திருக்கேதீச்சர மான்மியம் அரசிய சமய இலக்கிய மாகும்"— என்றார்.

பேராசிரியர் அ. சண்முகதாஸ், திரு. இ. ராசநாயகம், திரு. க. சொக்கலிங்கம் ஆகியோரும் உரையாற்றினார்கள்

பேராசிரியர் சிவத்தம்பி திருக்கேதீச்சர மான்மியம் நூலுக்கான விருது வழங்கிக் கௌரவித்தார்.

இந்த வைபவத்தைத் தொடர்ந்து பண்டிதமணி நினைவுப் பேருரை நிகழ்ந்தது. பேராசிரியர் சிவத்தம்பி "தமிழின் இரண்டாவது பக்தி யுகம் எனும் பொருளில் உரையாற்றினார்.

பேராசிரியர் அ. சண்முகதாஸ் இந் நிகழ்வுக்குத் தலைமை வகித்தார். (க-111)

உழைத்து வாழும் உயர்ந்த மனிதன்
விலைக்குத் தன்னை விற்றிட விரும்பான்

### கரும்புலி நாளையொட்டி

## தமிழீழத் தேசியக்கொடி ஏற்றல்; கடைப்பிடிக்க வேண்டிய ஒழுங்குகள்

யாழ்ப்பாணம், ஜூலை 4
கரும்புலிகள் தினமன்று தமிழீழத் தேசியக் கொடியை ஏற்றுவது தொடர்பாகக் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுங்கு முறைகளை விளக்கி தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் அரசியல்துறை அறிக்கை ஒன்றை வெளியிட்டிருக்கிறது.

அந்த அறிக்கை வருமாறு:
கரும்புலி நாளின் போது எமது தமிழீழ தேசியக்கொடியைச் சகல பாடசாலைகள், பொதுநிறுவனங்கள், திணைக்களங்கள், கூட்டுறவுச் சங்கங்கள், சனசமூக நிலையங்கள் ஆகிய இடங்களில் அன்றைய தினம் காலை 8.30 மணிக்கு முறைப்படி ஏற்றிப் பேணி, மலர் அஞ்சலி செய்து நமது தமிழீழத் தேசியத்தின் மகிமையைப் போற்றுவோம்! எமது விடுதலைப் போராட்ட மாவீரர்களை ஏற்றித் துதிப்போம்! அந்தக் காவிய நாயகர்களின் சாதனைகளின் மகிமைகளைப் பேசக் கேட்டுத் துதிப்போம்.

இதற்குத் தேவையான தேசியக் கொடிகளைத் தமிழீழ விடுதலைப் புலிகளின் கோட்ட அரசியல் துறைச் செயலகங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

எமது தமிழீழ தேசியக் கொடி 22 அடி உயரக் கம்பத்தில் — கொடியிலுள்ள புலியின்பார்வை கம்பத்திற்கு எதிர் திசையில் நோக்கும்வண்ணம் கிழிந்து பறந்துகொண்டிருந்தபடியே மக்கள் எல்லோரும் எழுந்து நின்று வணங்க — கொடி ஏற்றுபவர் கொடிக்கம்பத்திற்கும் மக்களிற்கும் இடையில் நிற்காது மக்களைப் பார்க்கும் நிலையில் நின்று கொடியை ஏற்ற வேண்டும்.

இக் கொடியேற்ற நிகழ்வுகளுக்குப் பொறுப்பாக நிற்போர் இக் கொடியேற்றும் வைபவங்களை நாட்டுப் பற்றோடும், தேசிய உணர்வோடும் நின்று அவதானித்து சிறு தவறுகூட ஏற்படாதவாறு சிறப்பாக நிகழ்த்த வேண்டும்.

இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## மனபலத்தின் உயர்பீடம் கரும்புலிகள் அமைப்பாகும்

### கருத்தரங்கில் விளக்கம்

சாவகச்சேரி, ஜூலை 4
எமது மனபலத்தின் உயர் பீடமாக தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் கரும்புலி அமைப்பு விளங்குகிறது.

தமிழீழ நிர்வாகப் பொறுப்பாளர் டொமினிக் சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் கடந்த வெள்ளி நடந்த கரும்புலிகள் தின கருத்தரங்கில் பேசுகையில் முன்கண்டவாறு தெரிவித்தார்.

அரச, திணைக்கள ஊழியர்கள் இக்கருத்தரங்கில் கலந்து கொண்டனர்.

'பல நாடுகளில் நடந்த யுத்தங்களில் வெற்றி, தோல்வி அந்தந்த நாட்டின் ஆட்பலத்தை வைத்து முன்பு தீர்மானிக்கப்பட்டது.

'நாளடைவில் அந்த நிலை மாறி, நவீன ஆயுதங்கள், போர் விமானங்கள் அணுகுண்டுகள் வெற்றி தோல்வியை நிர்ணயித்து வருகின்றன.

'ஆனால் எம்மிடம் உள்ள மனபலம் இந்த ஆயுதங்களை விட மேலான சக்தியைக் கொண்டுள்ளது. மனபலத்தால் தான் நாம் வெற்றியைப் பெற்று வருகின்றோம்.

'எமது உயிர், ஆயுதங்களை விட பலமானது. எதிரியின் பலகோடி ரூபா பெறுமதியான டோறா படகு ஒன்றை நிர்மூலமாக்க அது போன்ற படகு ஒன்று தேவையாகிறது. அதற்கு ஈடாக ஓர் உயிரை ஆயுதமாகப் பாவித்து அக் கப்பலினுள் சென்று அதனைத் தகர்க்கின்றோம்'— என்றும் அவர் கூறினார்.

இக்கருத்தரங்கில் தென்மராட்சி அரசியல் பொறுப்பாளர் இளநாதனும் பேசினார். (எ-31)

## புலிகளின் குரல் வானொலியில்

1994 — 07 — 04
திங்கள் இரவு
- ★ 8-01 — கரும்புலிகள் தினத்தை முன்விட்டு சிறப்பு நிகழ்ச்சி" வெற்றி பெற்றுத் தந்தவர்கள்"
- ★ 8-20 — செய்திச்சரம்
- ★ 8-30 — செய்திகள்
- ★ 8-40 — தரிசனம்— தமிழீழ காவற்றுறைப் பொறுப்பாளர் திரு. பா: நடேசன் அவர்களுடனான செவ்வி

1994 — 07 — 05
செவ்வாய் காலை
- ★ 7-03 — மாவீரர் வணக்கம்
- ★ 7-15 — இன்றைய தாரகை
- ★ 7-30 — செய்திகள்
- ★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
- ★ 7-40 — தாயகப்பாடல்கள்

## பிரசாரத்துக்கு டி. பியுடன் அனுரா வும்!

கொழும்பு, ஜூலை 4
ஆளும் கட்சியின் சார்பில் ஜனாதிபதி விஜேதுங்காவுடன் நாடு முழுவதும் சென்று பிரசாரம் செய்வதற்கு அமைச்சர் அனுரா பண்டாரநாயக்கா திட்டமிட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது. (ஓ-எ)

### வடபகுதிக்கு

## மேலும் 15ஆயிரம் தென்னம் நாற்றுகள்

யாழ்ப்பாணம், ஜூலை 4
மேலும் 15ஆயிரம் தென்னம் நாற்றுக்களை கப்பல் மூலம் தருவிப்பதற்கு யாழ். மாவட்ட சமநல சேவைகள் திணைக்களம் முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

இதற்குத் தேவையான உதவிகளை யாழ். அரச அதிபர் கமநல சேவைகள் திணைக்களத்திற்கு வழங்கி வருகிறார் ஏற்கனவே 20ஆயிரம் தென்னம் நாற்றுக்கள் யாழ். மாவட்ட கமநல சேவைகள் திணைக்களத்தினால் தருவிக்கப்பட்டு கமநல சேவை நிலையங்களின் நாற்றுமேடைகளில் நடப்பட்டுள்ளன. இவை நவம்பர் மாத இறுதியில் விநியோகிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுகிறது. (எ-4)

## தேர்தல் பாதுகாப்பு கிழக்கில் படையினரிடம்

எதிர்வரும் பொதுத் தேர்தலின்போது, கிழக்கிலும் வடக்கில் சில பகுதிகளிலும் பாதுகாப்புக்குப் பொறுப்பாக ஆயுதபடையினரே நிறுத்தப்படுவர் என்றும்—

எனினும் தேர்தல் தொடர்பான ரோந்துப்பணி, வாக்களிப்பு நிலையங்களுக்கு பாதுகாப்பு வழங்குவது ஆகியவற்றை பொலிஸாரே மேற்கொள்வர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (எ)

## ஆசிரியருக்கான கூட்டம்

யாழ்ப்பாணம்: ஜூலை 4
தெல்லிப்பழைக் கல்விக் கோட்டப் பாடசாலைகளில் ஆண்டு 6 இல் விஞ்ஞானம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான கூட்டம் 6 ஆம் திகதி புதன் கிழமை பிற்பகல் 2 மணிக்கு யூனியன் கல்லூரியில் நடைபெறும். (எ)

## நீர்வளப் பாதுகாப்பு

நீர் வளங்களைப் பாதுகாத்துப் பராமரிக்கும் நோக்குடன் ஆரம்பிக்கப்பட்ட தேசிய நீர்வள மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் கோப்பாய் நீர்வேலி அணைக்கட்டை வலுப்படுத்தும் வேலைகளை தேசநிர்மாணிகள் ஆரம்பித்துள்ளனர். (எ)

படைத்த வளம் அத்தனையும் பக்குவமாய்
பார்த்திடுவோம்
அழித்து வரும் அரசுதனை அடிபணிய
வைத்திடுவோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'நரோமா' சேவை நடக்குமா?

யாழ்ப்பாணம், ஜூலை 4

திருகோணமலைக்கும், பருத்தித்துறைக்கும் இடையில் சேவையில் ஈடுபடும் "நரோமா" பயணிகள் கப்பலின் சேவை நாளை மறுதினம் நடைபெறுவது சந்தேகமே என்று யாழ். அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் நேற்று மாலை தெரிவித்தார்.

இக்கப்பல் சேவை நாளை நடைபெற முன்னர் ஏற்பாடாகி இருந்தது.

நாளை கரும்புலிகள் தினம் அனுஷ்டிக்கப்படுவதால் அந்த சேவையை நாளை மறுதினம் நடத்த ஏற்பாடு செய்யுமாறு அரச அதிபர் பாதுகாப்பு அமைச்சைக் கேட்டிருந்தார்.

இதுகுறித்து நேற்று மாலை வரை பதில் ஏதும் கிடைக்கவில்லை என்றும் —

அதனால் இச்சேவை நடப்பது சந்தேகம் என்றும் — அரச அதிபர் தெரிவித்தார்.


## யாழ். ஸ்ரீதரில்

மாலை 4.00 மணிக்காட்சியாக

**உயிராயுதம்**

மாலை 6.00 மணிக்காட்சியாக

**JURASSIC PARK**

நாளை கரும்புலிகள் நினைவு நாளை முன்னிட்டு

காலை 10.30 மணிக்காட்சியாக

**மே - 94 ஒளிவீச்சு**

மாலை 4.00 மணிக்காட்சியாக

**உயிராயுதம்**

மாலை 6.00 மணிக்காட்சியாக

**தாயகக்கனவு காண்பிக்கப்படும்**

06 - 07 - 1994 இல் இருந்து மீண்டும்

**JURASSIC PARK**

காண்பிக்கப்படும்,

[சி/8593]


## மரண அறிவித்தல்கள்

### நடேசு கந்தசாமி

(இளைப்பாறிய பிரதம நீர்ப்பாசன பொறியியலாளர்)

நடேசு கந்தசாமி (இளைப்பாறிய பிரதம நீர்ப்பாசன பொறியியலாளர்) நேற்றுக் காலமானார்.

அன்னார் கொக்குவிலைச் சேர்ந்த நடேசு, ராசம்மா தம்பதிகளின் மூத்த புதல்வரும், இணுவில் தெற்கைச் சேர்ந்த சிவகுரு (வை. சி. கடை யாழ்ப்பாணம்), யோகம்மா தம்பதிகளின் மூத்த மருமகனும், பரஞ்சோதியின் அன்புக் கணவரும், யோகாவினதும், காலஞ்சென்ற தனஞ்செயனினதும் அன்புத் தந்தையாரும், Dr. சண்முகலிங்கத்தின் (யாழ். போதனா வைத்தியசாலை) அன்பு மாமனாரும், ஹம்சத்வனி, தனஞ்செயன் ஆகியோரின் பிரிய பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (4 - 7 - 94) காலை 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, தகனக் கிரியைகளுக்காக பூதவுடல் கொக்குவில் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை அறியத் தருகின்றேன்.

தகவல்:
திருமதி பரஞ்சோதி கந்தசாமி
(மனைவி)

கே. கே. எஸ். றோட்,
குளப்பிட்டிச் சந்தி,
கொக்குவில். (31742)

### குழந்தைவேலு சபாபதிப்பிள்ளை

ஊரெழு கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், சுன்னாகம் கடவப்புலத்தை வசிப்பிடமாகக் கொண்டிருந்தவருமான குழந்தைவேலு சபாபதிப்பிள்ளை 2-7-94 இல் வவுனியாவில் காலமானார்.

அன்னார் அன்னம்மாவின் அன்புக் கணவரும், சற்குணராசா, வதனா, சந்திரராசா (நோர்வே), குணராசா, அகிலானந்தராசா, சாந்தினிதேவி (சுவிஸ்), ரஞ்சினிதேவி, தெய்வேந்திரன், ரதிதேவி (இந்தியா), ஆகியோரின் அன்புத் தந்தையும், சந்திரபோஸ் (மின்சார சபை, சுன்னாகம்), ஸ்ரீதரன் (பிள்ளையார் ஸ்ரோர்ஸ், யாழ்ப்பாணம்), கௌசல்யா (சுவிஸ்), ராஜேஸ்வரி (நோர்வே), விஜயராணி ஆகியோரின் அன்பு மாமனாரும், தம்பிப்பிள்ளை (ஊரெழு கிழக்கு), காலஞ்சென்ற குமாரப்பிள்ளை (வளிப்புலம், சுன்னாகம்) ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று ஞாயிற்றுக்கிழமை வவுனியாவில் நடைபெற்றன.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் தயவு செய்து ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
நா: ஞானேஸ்வரன்
(மருமகன்)

சுன்னாகம். (31744)

### திருமதி மகாலிங்கம் இராசலெட்சுமி

வேலணை மேற்கு 8 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த திருமதி மகாலிங்கம் இராசலெட்சுமி வேலணை மேற்கில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற மகாலிங்கத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சற்குணம், சதானந்தன் (பிரான்ஸ்), சற்குணராணி (பிரான்ஸ்), செல்வராணி (பிரான்ஸ்), மகேந்திரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற இராசேந்திரன், தனலெட்சுமி, பால்ராஜ் (பிரான்ஸ்), ரங்கராஜ் (பிரான்ஸ்), இராசலெட்சுமி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் வேலணையில் நடைபெற்றன. தகன நிகழ்வுகள் 4 - 7 - 94 இன்று திங்கட்கிழமை தர்மலிங்கம் வீதி, (C.T.B. லேன்) கொண்டாவில் இல்லத்தில் இடம்பெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சதானந்தன் தனலெட்சுமி
மருமகள்

(31743)

## ஆலயங்களில்

கொண்டாவில் கிழக்கு ஆதிமட அரசடி விநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவம் நாளை செவ்வாய் பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 12 தினங்கள் நடைபெறும்.

எதிர் வரும் 13 ஆம் திகதி இரதோற்சவமும், மறு நாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். உற்சவ நாட்களில் தினமும் இரவு 7-30 மணிக்கு "திருவிளையாடற்புராணம்" என்னும் விடயம் குறித்து கம்பன் கழக அமைப்பாளர் திரு இ. ஜெயராஜ் விரிவுரை நிகழ்த்துவார். (ஞ)

★ ★ ★

திருநெல்வேலி ஸ்ரீ முத்துமாரிஅம்மன் ஆலய வருடாந்த உற்சவம் நாளை செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி பத்துத் தினங்கள் நடைபெறும்.

13 ஆம் திகதி புதன்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (ஓ-111)

★ ★ ★

உடுவில் வடக்கு அருள்மிகு சொர்ண விநாயகர் ஆலய சங்காபிஷேகம் இன்று (திங்கள்) காலை நடைபெறும். மகேஸ்வர பூசையும் இடம்பெறும். (எ-89)

★ ★ ★

அராலி சாட்டுண்ணிய மூர்த்தி கந்தஞானியார் ஆலய ஸ்ரீ சிவகாமசவுந்தரி சமேத சிவசிதம்பரேஸ்வரர் தேவஸ்தான வருடாந்த அலங்கார உற்சவம் நாளை (செவ்வாய்க்கிழமை) காலை 10 மணி தொடக்கம் ஆரம்பமாகி, 15-7-94 வரை 11 நாட்கள் தொடர்ந்து நடைபெறும். (எ-12)

★ ★ ★

அராலி மேற்கு வண்ணப்புரம் விசாலாட்சி சமேத விஸ்வநாதர் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் நாளை செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. தேர்த் திருவிழா 13 ஆம் திகதி புதன்கிழமையும் தீர்த்தத் திருவிழா மறுதினம் வியாழக்கிழமை நண்பகலும் நடைபெறும். (க-12)

★ ★ ★

சாவகச்சேரி, ஜூலை 4

சாவகச்சேரி சந்திரசேகர வாரிவன நாத சிவன் கோயில் வருடாந்த மஹோற்சவம் நாளை (5-7-1994) காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது 13-7-1994 புதன்கிழமை இரதோற்சவமும் மறுநாள் தீர்த்தோற்சவமும் நடைபெறும். [ஈ-31]

★ ★ ★

பன்னாகம் விசுவத்தனை முருகமூர்த்தி கோயிலில் இன்று கார்த்திகைத் திருவிழா நடைபெறவுள்ளது. "கண்கண்ட தெய்வம் முருகன்" என்ற பொருளில் வட்டூர் சி. தயாபரலிங்கத்தின் சிறப்புரையும் அங்கு இடம்பெறவுள்ளது. (ஐ-28)

★ ★ ★

எழுதுமட்டுவாள் ஸ்ரீ மீனாட்சி சமேத சோமசுந்தரேஸ்வரர் கோயில் ஆனி உத்தர மஹோற்சவ பெருவிழா நாளை நண்பகல் 11.45 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 நாட்கள் நடைபெறும். தேர்த் திருவிழா எதிர்வரும் 13 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு இடம்பெறும்.

★ ★ ★

சித்தன்கேணி ஸ்ரீ சிவகாமி அம்பாள் சமேத சிவசிதம்பரேஸ்வரர் கோயில் வருடாந்த மஹோற்சவம் நாளை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. திருவிழா நாட்களில் தினமும் மாலை 6 மணிக்கு காரைநகர் கம்பன் கழக அமைப்பாளர் திரு த. சிவகுமாரனின் திருவிளையாடல் புராண சிறப்புரை இடம்பெறும். (உ-ஐ-28)

## தபால்மூல வாக்கு குறித்து அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 4

பொதுத் தேர்தலில் தபால் மூலம் வாக்களிப்பதற்கான விண்ணப்பங்கள் எதிர் வரும் 8 ஆம் திகதிக்கு முன் தேர்தல் அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட வேண்டும்.

இப்படி தேர்தல் ஆணையாளர் சந்திரானந்த டி. சில்வா அறிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்துக்கு தபால்கள் போய்ச் சேர்வதில் தாமதம் ஏற்படுவதால் தபால் மூலம் வாக்களிப்பதற்கான விண்ணப்பங்களை யாழ் தேர்தல் அதிகாரிகளுக்கு அனுப்பி வைக்க கொழும்பு செயலகம் நடவடிக்கை எடுத்துவருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (இ-ஐ)

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ். மாவட்ட லியோ கழகம் நடத்தும் 7 பேர் கொண்ட அணி ஞக்கிடையிலான — 12 ஓவர்களைக் கொண்ட — கிரிக்கெட் சுற்றுப் போட்டி இன்று பிற்பகல் 3.30 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.

இன்றைய ஆட்டங்களில் பங்குபற்றும் கழக அணிகள் வருமாறு:-

★ மானிப்பாய் பரிஷ் லியோ கழகம் எதிர் யாழ் வட்ட லியோ கழகம்.

★ சாவகச்சேரி இந்து லியோ கழகம் எதிர் யாழ். இந்து லியோ கழகம்.

★ சென் பற்றிக்ஸ் லியோ கழகம் எதிர் மத்திய கல்லூரி லியோ கழகம்.

★ சாவகச்சேரி நகர லியோ கழகம் எதிர் யாழ்ப்பாணக் கல்லூரி லியோ கழகம்.

★ ★ ★

யாழ். கல்வி வலயம் இரண்டிற்கு உட்பட்ட பாடசாலைகளுக்கு இடையிலான வலைப்பந்தாட்ட சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டிகள் இன்று பிற்பகல் 2.30 மணிக்கு நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளன. இறுதிப் போட்டியில் பங்கு பற்றும் அணிகள் வருமாறு:-

★ 17 வயது — பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர் கல்லூரி அணி எதிர் வட இந்து மகளிர் அணி.

★ 19 வயது — உடுவில் மகளிர் கல்லூரி அணி எதிர் மெதடிஸ்த பெண்கள் உயர் கல்லூரி அணி (ஐ)

## இன்று

சண்டிலிப்பாய் கல்விக் கோட்டத்தால் மானிப்பாய் மெமோரியல் ஆங்கிலப் பாடசாலையில் நடத்தப்படும் கற்பித்தல் சாதனக் கண்காட்சியை இன்று 4 ஆம் திகதி நண்பகல் 12 மணி வரை பாடசாலை மாணவர்களும் ஆசிரியர்களும் இலவசமாகப் பார்வையிடலாம் எனக் கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (க)

★ ★ ★

யாழ். பல்கலைக்கழக மறுமலர்ச்சிக் கழகம் ஏற்பாடு செய்துள்ள "கரும் புலிகள் தின" நிகழ்ச்சிகள் இன்று பிற்பகல் 3 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் நடைபெறும். நினைவுரைகளை தொடர்ந்து கரும்புலிகள் தொடர்பான ஒளிப்பதிவு நாடா அங்கு காண்பிக்கப்படும். (உ-ஐ)

★ ★ ★

யாழ். மாநகர சபை சுகாதாரப் பகுதியினரால் நடத்தப்படும் சுகாதாரத் தொண்டர்களுக்கான பயிற்சி நெறி இன்று காலை 8.30 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து ஐந்து நாட்களுக்கு பயிற்சி நெறி அங்கு நடைபெறும்.

ஆரம்ப சுகாதார கவனிப்பு, நோய்த்தடுப்பு மற்றும் அடிப்படை சேவை வசதிகள் தொடர்பான விரிவுரைகள் பயிற்சி நெறியில் இடம்பெறவுள்ளன. (உ-ஐ)

★ ★ ★

கலாமி விவேகானந்தரின் உலக சமயப் பெருவிழாத் தொடரில் கோப்பாய் நாவலர் ஆரம்பப் பாடசாலையில் இன்று முற்பகல் 9.00 மணி முதல் புத்தகக் கண்காட்சி ஒன்று இடம்பெறவுள்ளது.

பருத்தித்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தின் ஏற்பாட்டில் இந்தக் கண்காட்சி நடைபெறுகிறது.

★ ★ ★

தெல்லிப்பழைக் கல்விக் கோட்டம் நடத்தும் சிறுவர் நாடக விழா இன்று பிற்பகல் 2 மணிக்கு மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை திறந்த வெளியரங்கில் நடைபெறும். (க)

### பருத்தித்துறையில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

லில் ஈடுபட்டிருந்த பருத்தித்துறையைச் சேர்ந்த — ஏழு பிள்ளைகளின் தந்தையான — சின்னையா தங்கராசா (வயது 67) என்பவரும் கடற்படையினரால் பிடித்துச் செல்லப்பட்டனர்.

கடற்படையினர் கயிறுவீசி பிடித்து இவர்களை தமது 'டோரா' படகில் ஏற்றிக் கொண்டு சென்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

இவர்களது மீன்பிடி உபகரணங்கள் பின்னர் கடலில் இருந்து மீட்கப்பட்டன.

இதேவேளை —

நேற்று அதிகாலை 1.30 மணிமுதல் வடமராட்சியின் கரையோரப் பகுதிகளை நோக்கி கடற்படையினர் தொடர்ச்சியாக பீரங்கித் தாக்குதல்களை மேற்கொண்டனர். இதனால் அப்பகுதிகளில் பதற்றம் நிலவியது.

## ✳ இலங்கை இனப்பிரச்சினை:

# மத்தியஸ்த முயற்சி எதிலும் அமெரிக்கா ஈடுபடமாட்டாது!

வாஷிங்டன், ஜூலை 4

இலங்கை இனநெருக்கடியில் அமெரிக்கா மத்தியஸ்த பங்கு எதனையும் வகிப்பதற்கு இல்லை.

இலங்கையில் உள்ள அமெரிக்கத் தூதுவர் திருமதி தெரசிற்றா ஷாபர் இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

அமெரிக்க சமாதான நிறுவனத்தைச் சேர்ந்த சிரேஷ்ட கல்விமான் டேவிட் லிற்றின் இலங்கை தொடர்பாக எழுதிய நூலின் வெளியீட்டு வைபவம் அண்மையில் வாஷிங்டனில் நடைபெற்றது.

இந்த வைபவத்தின் போது 'இலங்கை அரசியல் நெருக்கடியில் மதம்' என்ற தலைப்பில் இரண்டு மணித்தியாலயக் கருத்தரங்கு ஒன்று நடைபெற்றது.

இந்தக் கருத்தரங்கில் உரையாற்றிய அமெரிக்க தூதர் திருமதி ஷாபர் மேலும் தெரிவித்தாவது:-

இலங்கை இனநெருக்கடியில் மத்தியஸ்தப் பங்கு எதனையும் அமெரிக்கா நாடவில்லை. அமெரிக்கா கவனம் செலுத்த வேண்டிய வேறு பல நெருக்கடிகள் இருக்கின்றன.

இலங்கை நெருக்கடியில் மத்தியஸ்தம் செய்ய அமெரிக்கா விரைவாகப் பாய்ந்தடித்துக் கொண்டு ஓடினால் அது பெரும் செலவுகளை ஏற்படுத்தும்.

சர்வதேச மத்தியஸ்தத்தில் சந்தேகம் கொண்டதாகவும், நம்பிக்கையற்றதாகவும் இலங்கை அரசு உள்ளது.

சர்வதேச மத்தியஸ்தம் அல்லது உதவியினால் ஏற்படும்

### தூதுவர் அறிவிப்பு

பலன் தமிழர் தரப்பிற்கே மிகக் கூடியதாக இருந்துள்ளது. இது சர்வதேச மத்தியஸ்தம் தொடர்பாக இலங்கை அரசின் சந்தேகத்தை மேலும் வலுப்படுத்துவதாக அமைந்துள்ளது.

இலங்கையின் உள்ள ஒவ்வொரு சமூகமும் தன்னைப் பாதிக்கப்படும் சிறுபான்மை என்று நினைக்கிறது இலங்கை நெருக்கடியைக் கையாளுவதில் உள்ள சிக்கலே இது தான்.

தமிழர்கள், கிறிஸ்தவர்கள் முஸ்லிம்கள் இலங்கையின் சிறுபான்மையினரே;

ஆனால் சிங்களவர்களோ தாங்கள் தெற்காசியாவில் சிறுபான்மை அந்தஸ்தில் இருப்பதாக உணருகின்றார்கள். — இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார். (உ-ஐ)

### ஐ. தே. க. சார்பில் இராசதுரை?

கொழும்பு, ஜூலை 3

மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் எம். பியும் அமைச்சருமான திரு செ. இராசதுரை எதிர்வரும் தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஐ. தே. க. வேட்பாளராகப் போட்டியிடலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

எம். பியாக அமைச்சராகி, இறுதியில் ராஜாங்கந்திரியாக சேவையாற்றிய அவர் இப்போது மீண்டும் எம். பியாகும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார் எனத் தெரிவிக்கப்படுகிறார். (ஞ-எ)

### லேக்ஹவுஸ் அதிபர் கண்டியில் போட்டி

எதிர்வரும் பொதுத் தேர்தலில் கண்டி மாவட்டத்தில் போட்டியிடும் ஐ. தே. க. வேட்பாளர்களைக் கொண்ட பட்டியலில் முதன்மை வேட்பாளராக டாக்டர் சரத் அமுனுகம இருப்பார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியில் இருந்து விலகி ஐக்கிய தேசியக் கட்சியில் சேர்ந்து கொண்ட இவர் தற்போது அரசுக் கட்டுப்பாட்டில் உள்ள லேக்ஹவுஸ் பத்திரிகை நிறுவனத்தின் தலைவராகப் பணிபுரிந்து வருகிறார். (எ)

### மட்டக்களப்பில் தீ விபத்து

கொழும்பு, ஜூலை 4

மட்டக்களப்பு மாநகரசபை எல்லைக்குள் கடந்த புதன்கிழமை ஏற்பட்ட பாரிய தீ விபத்தில் ஏழு வர்த்தக நிலையங்கள் எரிந்து போயின எனத் தெரிவிக்கப்படுகிறது.

பிரதான வீதியில் நான்கு கடைகளும் ஆமன் கோணர் வீதியில் நான்கு கடைகளும் பெருமளவு பாதிக்கப்பட்டன.

பிரதான வீதியில் உள்ள பற்றரி சார்ஜ் செய்யும் கடையில் ஏற்பட்ட மின் ஒழுக்கே இதற்குக் காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது. (எ)

### செல்லச்சாமிக்கு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

களாகப் போட்டியிட அனுமதி வழங்கும்படி செல்லச்சாமி கட்சித் தலைமைப் பீடத்துக்கு விண்ணப்பித்திருக்கிறார். அத்துடன் இது தொடர்பாக ஜனாதிபதி விஜேதுங்கா, அமைச்சர் சொக்ஸி மற்றும் கட்சித் தலைவர்களையும் அவர் சந்தித்துப் பேசியுள்ளார்.

இதேவேளை — செல்லச்சாமி ஐ. தே. க. வேட்பாளராக நியமிக்கப்படின், அது இ. தொ. கா. — ஐ. தே. க. தேர்தல் உடன்பாட்டில் பாரிய விரிசலை ஏற்படுத்தும் என்று அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர். (எ)

## தன் அணிக்கே கோல் அடித்த வீரர்

# உலகக் கிண்ண ஆட்டத்தில் விளையாடியவர் கொலை

### கொலம்பியாவில் சம்பவம்

மணிலா, ஜூலை 4

அமெரிக்காவில் நடந்து வரும் உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகளில் கொலம்பியா நாட்டு அணியின் சார்பில் விளையாடிய பிரபல வீரர் அன்ட்ரஸ் எஸ்கோவர் (வயது 27) கொலம்பியாவின் மெடலின் நகரில் சுட்டுக் கொல்லப்பட்டார்.

அமெரிக்காவுக்கு எதிராக நடைபெற்ற ஆட்டத்தில் எஸ்கோவர் தவறுதலாக அடித்த பந்து அவரது அணிக்கு எதிராக ஒரு கோலை பெறச் செய்தது என்பதும் —

அந்த ஆட்டத்தில் அமெரிக்காவிடம் 2-1 என்ற கோல் கணக்கில் தோல்வியுற்றதால் கொலம்பிய அணி இரண்டாவது சுற்றில் விளையாடத் தகுதி இழந்து நாடு திரும்பியதும் குறிப்பிடத்தக்கவையாகும்.

இதனால் ஆத்திரமுற்ற கொலம்பிய நாட்டு வன்முறை குழு ஒன்று அவருடன் வாக்குவாதப்பட்டது என்றும் —

அதன் பின்னர் 12 தடவைகள் அவர் துப்பாக்கியால் சுடப்பட்டார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

கொலம்பியா நாட்டுக்காக உலகக்கிண்ண போட்டித் தொடர்கள் இரண்டு உட்பட 58 முதல் தர ஆட்டங்களில் இவர் விளையாடியவர் என்பது குறிப்பிடத்தக்கது. (உ-3)

### கால் இறுதிக்கு தெரிவு

வாஷிங்டன், ஜூலை 4

உலகக் கிண்ண உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் கால் இறுதியாட்டத்துக்கு ஜேர்மனி, ஸ்பெயின் ஆகியன தகுதிபெற்றுள்ளன.

நேற்று முன்தினம் சிக்காகோவில் நடைபெற்ற ஆட்டத்தில் பெல்ஜியத்தை 3 - 2 என்ற கோல் கணக்கில் ஜேர்மனியும்

வாஷிங்டனில் இடம்பெற்ற ஆட்டத்தில் சுவிட்ஸர்லாந்தை 3-0 என்ற கோல் கணக்கில் ஸ்பெயினும் தோற்கடித்தன.

லொஸ் ஏஞ்சல்ஸில் நேற்று நடைபெற்ற மற்றோர் ஆட்டத்தில் சவூதி ஆரேபியாவை 3 — 1 என்ற கோல்கணக்கில் வென்று சுவீடன் அணி கால் இறுதிக்குத் தெரிவானது.

### அவசரகாலச்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மாத இடைவெளியில் மீண்டும் அமுலுக்கு கொண்டு வரப்பட்டது. அதன் பின்னர் கடந்த ஐந்து வருடங்களாக அது மாதாந்தம் நாடாளுமன்றத்தால் நீடிக்கப்பட்டு வருகிறது.

நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு விட்டதால், அவசரகாலச் சட்டம் இம்மாதம் 15 ஆம் திகதியுடன் காலாவதியாகிறது.

வேண்டுமானால் பிரஸ்தாப சட்டத்தை நீடிப்பதற்காக, கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தைத் தற்காலிகமாகக் கூட்டுவதற்கு அரசமைப்புச் சட்டத்தின் 155 ஆவது சரத்து வகை செய்கிறது.

அதன் பிரகாரம் —

ஜனாதிபதி அவசரகால விதிகளைப் புதிதாகப் பிரகடனம் செய்து அதற்குச் சபையின் அங்கீகாரத்தைப் பெறுவதற்காக —

பிரகடனத் தேதியிலிருந்து பத்தாவது நாளான்று நாடாளுமன்றத்தை கூட்டலாம் அழைக்கலாம்.

ஆனால் இந்த அரசமைப்பு வசதியைப் பயன்படுத்தாமல், அவசரகாலச் சட்டத்தை தேர்தல் நடந்து புதிய நாடாளுமன்றம் கூடும் வரை காலாவதியாக விடுவதற்கு அரசு முடிவு செய்திருப்பதாக ஏஜன்சி செய்திகள் தெரிவித்தன.

அடுத்த மாதம் நடைபெறவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தல் சுதந்திரமான — நியாயமான — தேர்தலாக இருக்கவேண்டும் என்பதற்காகவே அரசுத் தலைவர் அவசரகாலச் சட்டம் காலாவதியாக விட முடிவு செய்திருப்பதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (அ-3)

### கரும்புலிகள்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யாழ் மாவட்ட சிற்றூர்திச் சேவைச் சங்கங்களின் இணையத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட கரும்புலிகள் ஊர்திப் பவனி நேற்று மாலை நடைபெற்றது.

மாலை 5 மணியளவில் யாழ். பஸ் நிலையப் பகுதியில் இருந்து தொடங்கிய அந்த ஊர்தி வலிகாமத்தின் பல பகுதிகளுக்கூடாகவும் சென்று மீண்டும் யாழ். பஸ் நிலையப் பகுதியை வந்தடைந்தது.

ஊர்திபவனி இடம்பெற்ற வீதிகள் எங்கும் மக்கள் கூடி மங்கள விளக்கேற்றி மலரஞ்சலி செலுத்தினர். கரும்புலிகளின் நினைவுப் பாடல்கள் இசைக்கப்பட்டன. ஊர்திப் பவனியில் காவடி ஆட்டமும் இடம்பெற்றது. (உ-ஐ-4)

### வீரகாவியம் ...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நாள் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும்.

கரும்புலிகள் நாளை ஒட்டிய பொதுக்கூட்டங்கள் நாளை இரவு கோட்ட ரீதியாக நான்கு இடங்களில் நடைபெறவுள்ளன. விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் அந்தக் கூட்டங்களில் உரையாற்றவுள்ளனர். பல்வேறு கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன. [உ-ஐ-3-4-173-111]

## மரண அறிவித்தல்

### உலகேசர் இராசரத்தினம்

குப்பிளான் தன்னை மேற்கு கரவெட்டியைச் சேர்ந்த உலகேசர் இராஜரத்தினம் (66 ஸ்ரீ 81) 3-7-94 நேற்று காலமானார்.

இவர் இராசேஸ்வரியின் அன்பு கணவரும் குகதாஸ், பிறேமதாஸ், குகநந்தினியின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று 04-07-94 காலை 10 மணியளவில் வேரோண்டை மயானத்தில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இ. பிறேமதாஸ்
(மகன்)

(31745)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 392/1 இல் உள்ள அச்சகத்தில் 04-07-1994 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org